1972 டிசம்பர் 2]

(இ) ஏற்றுமதி செய்யப்படுகின்ற 'வண்ணம் மாறும் துணிகள்', அவற்றைச் கொண்டு செய்யப்பட்ட ஆடைகள், எல்லா இடங்களுக்கும் அனுப்பப்படுவதற்கென தயாரிக்கப்படுகின்ற 'எட்வா' வகை (கோடிட்ட) படுக்கை விரிப்புகள் ஆகிய இவையாவும், துணிகள் கப்பலேற்றி அனுப்பப்படும் முன்னர் ஆலேக்குழுவால் வரையறுக்கப்பட்ட தரங்களுக்கிணங்க, கட்டாயமாக ஆய்வு செய்யப்படுவதற்கும், தரக்குறியீடுகள் குறிக்கப்படுவதற்கும் உட்பட்டனவாகும்.

Distribution of yarn for handloom weavers

*12 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have addressed the Centre during 1972 to allow the State Government to take over the distribution of yarn by the Government so as to distribute yarn at fair price to the handloom weavers in this State; and

(*b*) if so, whether any reply has been received by the Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(ஆ) இதுவரையில் யாதொரு பதிலும் கிடைக்கவில்லை.

கொடைக்கானல் மலைச்சாலை

*13 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் மலைச்சாலையை அகலப்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.